# பணிநிறைவு வாழ்த்து!

நாள் 30-06-2020

திருமிகு வாசா ஷேசகிரி ராவ்,
முதன்மை ஆணையர்.

தென் தமிழும் தேனொழுகப் பேசிவிடத் தெலுங்காகும்!
மன்னியசீர் தமிழினொடு மறுதலித்துப் பிறந்ததினால்,
தென்னாட்டில் தெலுங்குக்கும் தனியதோர் இடமுண்டு!
பொன்னிகர் அம்மண் பிறந்த யெங்கள் சுங்கத்தலைவர்,

கண்ணியம்சீர் கனிவுடை ஏந்தலவர் வாசாவாம்;
திண்ணியதாம் அன்பின் கேள்வன் ஷேசகிரிராவ்,
எண்ணியதாம் அறுபது ஆண்டுகள் தாம் முடிய,
இன்நாளில் காண்பதந்தப் பணியின் நிறைவே!

மண்பதையும் போற்றும் ஓர் பெருவாழ்வை,
மண்ணகத்தில் பெற்றுவாழ வாழ்த்துவோமே!
இன்னியதாம் இகவாழ்வதனைப் பெற்றிடுக,
புண்ணியன் சீர் இறைவன் அருளில் நிறைந்தே!

அன்புடன்,
கு.ப. அசோகன்.

